IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No.116/2016

DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 04.45 PM.

<u>வா.சா.1 சாட்சி முத்துக்குமார் த.பெ.செல்லக்கண்ணு</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 02.09.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வா.சா.ஆ. 8 முதல் வா.சா.ஆ. 12 வரையான ஆவணங்கள் பிளாட் எண். 5 முதல் 9 வரையான சொத்துக்களுக்கு உரியது என்றால் சரிதான். எனது லேயவுட் படி 1 முதல் 9 வரையிலான பிளாட்டுகள் வரிசையாக வடக்கிருந்து தென்புறமாக சீராக இருக்கிறது என்றால் சரிதான். 1 முதல் 9 பிளாட்டுகள் எங்களது லேயவுட் படியும் சொத்துக்கள் படியும் மேற்கு பக்கம் கடைசியாக உள்ளது என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ. 5 ல் 1 முதல் 9 வரையிலான பிளாட்டுகள் எங்கு உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 8 முதல் 12 வரையிலான ஆவணங்களுக்கான மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. தனித்தனியாக தெரியுமா என்றால் அதிகமான பிளாட்டுகள் உள்ளதால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ. 8 முதல் 12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்வதற்கான காரணம் என்ன என்றால் வழக்கு சொத்தின் நான்குமாலாக மேற்படி ஆவணங்கள்தான் உள்ளது.

3. வா.சா.ஆ. 8 முதல் 12 வரையிலான ஆவணங்களுக்கான உரிமையாளர்கள் பட்டா வாங்கியுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. மற்ற பிளாட்டுகளுக்கான கிரைய ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவையான ஆவணங்கள் மட்டும் தாக்கல் செய்துள்ளோம். சர்வே எண்.283/1Aயில் 16 செண்டில் 2 1/2 செண்டு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 283/9A1Aயில் 13 1/2 செண்டு எனக்கு பாத்தியம் என்றால் சரியல்ல.

4. எனது தகப்பானாரை தத்தெடுத்த தாயம்மாள், 1ம் வாதி தனது இளவர்கள் பிள்ளைகள் 5 முதல் 7 வாதிகளை கட்டுப்படுத்தியும் 3, 4 வாதிகள் சேர்ந்து சுப்பிரமணிக்கு சர்வே எண். 283/9 ல் 35 செண்டை பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் எம்.காம் படித்துள்ளேன் என்றால் சரிதான்.

5. எனது தகப்பானாரை தத்தெடுத்த தாயம்மாள், 1ம் வாதி தனது இளவர்கள் பிள்ளைகள் 5 முதல் 7 வாதிகளை கட்டுப்படுத்தியும் 3, 4 வாதிகள் சேர்ந்து சர்வே எண்.283/9 ல் 86 செண்டில் 36 செண்டை ஆவண எண்.2346/1993 படி சுப்பிரமணி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் இதுதான் என்றால் சரிதான். **14.07.1993ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. மேற்கண்ட அதே நபர்கள் ஆவண எண்.2659/1995ன் படி எங்களால் கிரையம் செய்யப்பட்ட 7 மற்றும் 8 பிளாட்டிற்கு உரிய ரோடு தானமாக

திருப்பரங்குன்றம் பேரூராட்சிக்கு பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 05.20 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.09.02 12:27:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.